**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, (FTC) ERANIEL**

***DEPOSITION OF WITNESS***

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

***STCNo. 13/2023 P.W. 1***

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. குழந்தை தெரசாள்** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. பிகேலின் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 22.09.2023**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் குடும்பத்தாரை எனக்கு 30 வருடங்களாக தெரியும். 07.05.2017 ம் தேதி எங்கு வைத்து எத்தனை மணிக்கு மேற்படி பணம் ரூபாய் 30 இலட்சம் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் எங்கள் வீட்டில் வைத்து மதியம் 03.30 மணிக்கு கொடுக்கப்பட்டது. 07.05.2018 ம் தேதி எங்கு வைத்து எத்தனை மணிக்கு பணம் ரூபாய் 25 இலட்சம் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் எங்கள் வீட்டில் வைத்து காலை 10.00 மணிக்கு கொடுக்கப்பட்டது.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபர் சென்னையில் உள்ள சத்யா பாமா பல்கலைகழகத்தில் 2008 லிருந்து பணி செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். நான் பணம் கொடுத்த காலகட்டத்திலும் தற்சமயமும் எந்த வேலையும் பார்க்கவில்லை, குடும்ப தலைவியாக தான் இருந்து வருகிறேன். நான் வருமான வரி செலுத்தும் நபர் அல்ல. நான் பணம் கொடுக்கல் வாங்கலை வரவு செலவு எழுதி வைக்கும் பழக்கம் இருக்கிறதா என்றால் இல்லை.

3. காசோலை தொகையை தவிர குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனக்கு வேறு தொகை எதுவும் தரவேண்டியதில்லை. நான் பதிவுச் செய்யாத சீட்டு எதுவும் நடத்துகிறேனா என்றால் இல்லை. 07.05.2017 மற்றும் 07.05.2018 ஆகிய இரு தேதிகளில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் சென்னையில் பணியில் தான் இருந்தார் என்று சொன்னால் எனக்கு அது தெரியாது. அம்மாவும், மகளும் தான் வந்து வாங்கினார்கள்.

4. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தாயாரான லிற்றில் பிளவருக்கும் எனக்கும் எதுவும் கொடுக்கல் வாங்கல் உண்டா என்றால் ஆம், 10,000 வாங்குவார்கள் திருப்பிக்

கொடுத்துவிடுவார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தாயார் 2016ம் வருடம் 2,50,000 ரூபாய் என்னிடம் கடன் பெற்றிருந்ததாகவும், அதற்கு அதிகப்படியான வட்டி கேட்டு நான் தொடர்ந்து துன்புறுத்தி வந்ததாலும், 06.05.2022 வரை ரூபாய் 9,50,000 வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மின்னனு பரிவர்த்தனை மூலமாக என்னுடைய கணக்கிற்கு அனுப்பி தந்துள்ளார் என்று சொன்னால் – பொய்.

5. என்னுடைய மருமகன் பெயர் கார்மிஸ். அவருடைய நண்பரான ரூசல் பெர்ணாண்டோ அக்கவுண்டில் ரூபாய் 3,50,000 வரை குற்றம் சுமத்தப்பட்ட நபர் நான் சொல்லி செலுத்தியுள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது. இது போக என்னுடைய வங்கி கணக்கில் நேரடியாக சுமார் 1, 25,000 குற்றம் சுமத்தப்பட்ட நபரால் செலுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை.

6. இந்த வழக்கு காசோலையை தவிர்த்து நான் எந்த கொடுக்கல் வாங்கலையும் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சரியாக கணக்கு விவரங்களை சொல்ல வேண்டியது எனது கடமை என்று சொன்னால் நான் யோசித்து சொல்கிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எனக்கும் நேரடியான கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

7. எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இடையே நேரடியான ஒப்பந்தம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி காசோலையை தவிர்த்து மேற்படி பணத்திற்கு ஆதரவாக எதுவும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்குமூலமே இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.